325

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை




மலர் 28 | பிங்கள ஞூ ஆடி இதழ் 1௨ [16—7—'77] | இதழ் 7

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

# திருவுந்தியார் உரைவிளக்கம் 13

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் பாலகவி

திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்.

தேவகோட்டை

(முன் தொடர்ச்சி) செய்யுள்—37

சென்ற நெறியெல்லாம் செந்நெறி யாம்படி

நின்ற பரிசறிந் துந்தீபற
நீ செயல் செய்யாதே யுந்தீபற

கன்மங்களுக்கேற்பத் துணை செய்கின்ற மனம் முதலிய கருவிகளுடன் கூடி, நச்சு வழியாகிய ஐம்பொறி வழியில் சென்று, விடயங்களிலே பொருந்தி நன்மை தீமைகளைச் செய்து, மறுமைக்கு வித்தாகிய குற்றங்களை விளைவிக்கும் அந்த வழியே, முத்தி நெறியாகிய செவ்விய வழியாகும்படி சிவசத்திகள் நின்ற மேம்பாட்டையறிந்து. தற்போதத்தால் நீ ஒரு செயலையும் செய்யாதிருப்பாயாக.

உயிர்களை விடயங்களிலே அழுத்தி, நன்மை தீமைகளைச் செய்யுமாறு வைக்கின்ற பஞ்சேந்திரியங்களாதியன மனம் முதலிய உட்கருவிகளால் ஏவப்படுதலும், அந்த ஏவுதலும் அவரவர் செய்த கன்மங்களுக்கேற்ப நிகழுதலும் உண்மையாம் உயிர்களைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிற மூன்று மலங்களுள். சண்மமலமே பிறப்புக்களுக்குக் காரணமாயிருப்பது கன்மம் என்பது, முன்னைப் பிறவியில் உயிராற் செய்யப்படும் இதம் அகிதம் என்னும் முயற்சியேயாகும். இதுவே ''ஆகாமியம்'' என்று சொல்லப் பெறுவது இந்த முயற்சி பயனுக்கு வரும்வரை கட்டுப்பட்டு. அறம் பாவம் என்னும் இருவகையாய் இருக்கும் இதுவே ''சஞ்சிதம்'' என்று சொல்லப்பெறுவது இவ்வறம் பாவங்கள் பலனுக்கு வரும் போது இன்பம், துன்பம் என்னும் இருவகைப்பட்டு நிற்கும். இதுவே ''பிராரத்தம்'' என்று சொல்லப் பெறுவது இங்ஙனம் ஆகாமியத்தால் சஞ்சித, பிராரத்தங்களும் பிராரத்தத்தை அநுபவிக்கும்

முறையில் மேல்ஆகாமியமும், அதனுல்சஞ்சிதமும் விளேந்து கொண்டேயிருக்கின்றன. ஒரு உயிர் ஆகாமியமாகிய இதமகி தத்தை, முதன் முதலாகச் செய்வதற்குரிய ஒரே காரணம்; அவ்வுயிருக்கு இயல்பாயுள்ள விருப்பு வெறுப்பேயாகும். அக் காரணமாகிய விருப்பு வெறுப்புக்களே ''மூலகன்மம்'' என்று சொல்லப்பட்டு, அதிலிருந்து விளேந்த ஆகாமிய கன்மம் உயிர் களேப் பிறப்பிறப்புக்களில் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கின்ற தென்பதை அறிந்து கொள்ளுதல் வேண்டும் மூலகன்மமே விருப்பு வெறுப்பென்பதை ''வேண்டுதல் வேண்டாமை யிலான்'' என்னும் திருக்குறளால் அறியலாம்

கன்ம மலத்தின் முதல் விளேவாகிய ஆகாமிய கன்மம் ஆணவமலத்தின் காரியங்களாகிய மோகம் முதலிய குணங் களுடனும், மாயாமலத்தின் காரியங்களாகிய தநு, கரணம் முதலியவற்றுடனும் கூடி, உயிர்களேப் பிறப்பிறப்புக்களிற் கட்டுப் படுத்தித், தனது காரியமாகிய இன்பதுன்பங்களின் வேறுபாட்டிற்கேற்பப் பலவேறு வகைப்பட்ட உடல்களில் அவ்வுயிர்கள் பொருந்துமாறு வைக்கும் இங்ஙனம் உயிர்கள் பிறப்பிறப்புக்களின் பாற் படுவதற்குக் கன்ம விளேகளே காரணமாயினும், விளேகள் சடமாதலால், அவ்விளேகளுக்கு டாகிய தநு-கரணுதிகளே நேராக அறிந்து சென்றுஅவைகள் அணேயமாட்டா உயிர்கள் அறிவுடையன வாயினும், தமக் கென அறிவில்லாதனவாதலின் விளேயின் பயனேத்தாமே அறிந்து எடுத்துக்கொண்டு அநுபவிக்கமாட்டா இதனுல் மாயையையும், விளேகளேயும் தொழிற்படுத்தி, உயிர்களுக்குச் சேர்ப்பது இறைவன் செயலே என்பது, துணியப்படும். 'இரு விளேயில் போக்கு வரவு புரிய ஆணேயின், நீக்கம் இன்றி நிற்கு மன்றே'' என்பது சிவஞானபோதம் உயிர்களே விளேயில் போக்கு வரவு புரியுமாறு வைக்கும் ஆணேயாகிய பராசத்தி யுடன், சிவபரம் பொருள் எப்போதும் நீக்கமின்றி நிற்கும்.

வினைகளை ஈட்டிப் பிறப்பிறப்புக்களின் பாற்படுதலும் பிறந்து பிறந்து வினைகளை ஈட்டுதலும் ஆகிய இவற்றிலேயே உயிர்கள் இடையருது ஈடிபட்டிருந்தால், இவற்றிலிருந்து விடுபட்டுத் துன்பங்கலவாத பேரின்பமாகிய முத்திப் பேற்றைப் பெறுவது எப்போது? பிறவிப் பெருங்கடலுள் அகப்பட்டு, நீந்தமாட்டாது அதனுள் அழுந்தும் உயிர்களுக்கு அச்சம் நீக்கிப் பேரின்பக் கரையிற் சேர்ப்பது, ஆசாரிய அநுக்கிரகம் ஒன்றேயாகும். அநுபவம் உடைய ஞானதேசிகரை அடுத்து, தீக்ஷை- உபதேசம் பெற்று, அவர் அருளிய நெறியை வழுவின்றிக் கடைப்பிடித்து ஒழுகுவதே, உண்மை உணர்த்தும் வாயிலாக நின்று உதவும் தேசிக மூர்த்திகள் செய்யும் தீக்ஷையால் சஞ்சிதகன்மம் முழுவதும், தீயிடைப் பட்ட பஞ்சுபோல ஒழிந்து விடும். அவரது உபதேசத்தால் சரீரம் வந்து கூடிய முறைமையும், அச்சரீரத்தில் தான் நிற்கிற முறைமையும், கன்மங்கள் வந்து கூடுகிற முறைமையும் உண்மையறியாமல் இந்திரிய கரணங்களுடன் கூடித் தாண் சலித்து நிற்கின்ற முறைமையும், தம்பிரானுர் சந்நிதியிலே கூடிச் சீவிக்கும் முறைமையும் அருட்கண்ணுல் காணக் கிடைக்கும். அது கிடைத்த பொழுது ஆன்மா, தன் செயலற நிற்கும் அப்போது பிராரத்தம் வந்து, தாக்காது கழியும், ஆகாமியம் ஏருது. தேகாந்தத்தில் திருவடி கூடுதலாகிய பேறு சித்திக்கும்.

உயிர், தன் இச்சையின்படி சென்று எந்நெறியில் நின்ருலும், உயிருக்கென ஓர் செயலுமில்லையாதலின், "சிவத்தினது செயலேநிறிபே எல்லாமும்" என்னும் உண்மையை உணர்ந்து தற்போதங் கெட ஒழுகுதல் வேண்டும்.

உயிர்களைப் போக போக்கியங்களில் அழுத்தி நுகர வைக்கும் சிவசத்தியே, பக்குவம் அடைந்த உயிர்களைச் சிவ

போகத்தில் அழுந்திப் பேரின்பம் நுகரும்படியும் வைக்கின்றது சிவமும், சத்தியும் பிரிப்பின்றி ஒன்றியிருப்பினும், சிவம் மேலோங்கியும் சத்தி அடங்கியும் இருக்கும் காரணம் பற்றியே, சிவம் ஆணுகவும், சத்தி பெண்ணுகவும் வேத சிவாகமங்களில் கூறப்பட்டுள்ளன. சிவம் செம்மை, வெம்மை, வன்மை முதலிய ஆண்மைக் குணங்களேயும் சத்தி பசுமை தண்மை, மென்மை முதலிய பெண்மைக் குணங்களேயும் கொண்டு, அழித்தல், அருளல் ஆகிய இரண்டு தொழில்களாலும், உயிர்களுக்கு அநுக்கிரகத்தைச் செய்து கொண்டிருக்கின்றன.

சிவசத்தியாகிய இரண்டும் கூடிய வடிவமே, சிவலிங்கமாகும். "ஆவுடை" என்று சொல்லப்படும் சிவலிங்க பீடம் சத்திவடிவம், லிங்கம் சிவ வடிவம் 'லிங்' என்பது ஒடுக்கத்தையும், "கம்" என்பது தோற்றத்தையும் குறிக்கும் ஆதலின், படைப்பு முதலிய பஞ்ச கிருத்தியங்களேயும் செய்யும் பரம்பொருள், சிவம் என்பது உணரப்படும், "சிவ" என்னும் சொல்லில் சிகரம் எல்லாவற்றையும் கடந்திருத்தலேயும் வகரம் எல்லாவற்றிலும் கலந்திருத்தலேயும் குறிப்பனவாகும் சிவலிங்க வழிபாடே எல்லாமாய் நிற்கும் இறைவன் வழிபாடு என்பது, அருள் நூல்களில் கண்ட பேருண்மை.

[தொடரும்]



[சிவ சிவ

# அருள் மொழி அமுது.

34. கழுமலமுது பதிக்கவுணியர்
H. நல்லவர் திருமணம்

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
3119, கீழ இரண்டாம் வீதி,
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

திருச்சிற்றம்பலம்

சமணரை வென்று சைவம் தழைக்கச்செய்த ஞானசம்பந்தப் பெருமான் மதுரையில் வாகை சூடியிருந்த காலையில் பெற்ற தந்தையாகிய சிவபாதயிருதயர் அவரைக் காணவந்தனர். அவரைக் கண்டதும் தோணியப்பரை எண்ணி உருகி

திருச்சிற்றம்பலம்

மண்ணி னல்ல வண்ணம் வாழலாம்:வைகலும்
எண்ணி னல்ல கதிக்கு யாது மோர் குறைவிலைக்
கண்ணி னல்ல∴துறும் கழுமல வள நகர்ப்
பெண்ணி னல்லா ளோடும் பெருந்தகை யிருந்ததே.

திருச்சிற்றம்பலம்.

பின்னர் திருப்பரங்குன்றம், திருவாப்புடையார் கோயில்,திருப்புத்தூர். திருப்புவனம், காளையார்கோயில் திருச்சுழி,குற்ருலம், குறும்பலா,திருநெல்வேலி,ராமேஸ்வரம்

முதலான பதிகளைப்பணிந்து' நினைவிலேயே நோக்கி இலங்கையிலுள்ள திருகோணமலையைப் பாடிப்பணிந்து, மதுரை திரும்பி பாண்டியன் முதலானவர்களிடம் பிரியாவிடை பெற்று, சோழநாடு புகுந்து திருக்களர், திருப்பாடலீச்சுரம், முதலானபதிகள் பணிந்து வணங்கினர்.

திருப்பாதளீச்சுரம் வந்தகாலை எதிர்க்கரையில் தோன்றிய திருக்கொள்ளம்புதூரை தரிசிக்க எண்ணினர், ஆற்றில் வெள்ளம் வந்து ஓடம்செல்லமுடியாதிருந்தது.

திருச்சிற்றம்பலம்.

கொட்டமே கமழுங் கொள்ளம்புதூர்
நட்டமாடிய நம்பனையுள்கச்
செல்லவுந்துக சிந்தையார்தொழ
நலகுமாறருள் நம்பனே

திருச்சிற்றம்பலம்.

எனத்தோணியிலிருந்த வாறே தேவாரம் பாட ,தோணி அக்கரை சேர்ந்தது. மதுரையையும் திருநள்ளாற்றையும் எண்ணி,ஏடுவேகாது பச்சையாகவே இருக்கச் செய்த தன்மை எண்ணி ஆராமையினல் ''பாடக மெல்லடி'' எனப் பதிகம் பாடிப் பரவினர். பின்னர் திருத் தெள்ளி சேரியென்னும் ஊரினை வணங்கி வருங் காலத்தில் போதமங்கை என்ற புத்தத்தலம் எதிர்பட்டது. ''பரசமய கோளரி வந்தான்:,, என்று ஊதப்படும் சின்னம் கேட்டு, புத்தர்கள் எதிர் கொண்டு வாதுக்கு வந்தனர். சம்பந்தப் பெருமானுடைய பாடல்களைத் தன்கையால் எழுதும் சம்பந்த சரணலயர் என்னும் பெரியார், சம்பந்தப் பெருமானைத் தடுத்த ''உருமிடித்து விழப்புத்தன் உத்தமாங்கம் உருண்டுவீழ்க எனச்சாபமிட, உத்தமாங்கமாகிய தலைவெடித்துப் புத்தன்

இறந்தான் பிறகு சாரிபுத்தன் என்பவனுடன் வாதம்செய்து சம்பந்த சாணுலயரே வென்ருர். புத்தரனை வரும் சைவர் களாகினர்.

பின்னர் திருக்கடவூரை வணங்கி, அப்பர் சுவாமிகள் திருப்பூந்து ருத்தியில்இருப்பதையறிந்து, தனதுசவி கை ஏறி அத்தலத்திற்கு எழுந்தருளினுர். சம்பந்தப்பெருமான் வருவதறிந்த அப்பர் சுவாமிகள் அவரை, 'எவரும் காணுவண் ணம்நிலந் தோய்ந்து வணங்கி சிவிகையைச் சுமந்துரவலானுர் "அப்பர் எங்குற்ருர்?" எனச்சம்பந்தப் பெருமான் வினவ, பெருந்தவம் செய்யப்பெற்ற தனுல்சிவிகை சுமந்து இங்கு வரும்பேறுபெற்றேன்" எனஅப்பர் பதிலளித்தனர் திடுக்கிட்டு, சிவிகை விட்டுஇறங்கிய சம்பந்தர் "இவ்வாறு செய்தருளலாமா? ,,எனக்கேட்க ,,திருஞான சம்பந்தருக்கு எவ்வாறு செய்யத்தகுவது? "எனக்கேட்டனர்.

அவ்வார்த்தை கேட்டஞ்சி அவனியின் மேலிழிந்தருளி
"இவ்வாறு செய்தருளிற்றென்னும்?" என்றிறைஞ்சுதலும்
செவ்வாறு மொழிநாவர் "திருஞான சம்பந்தர்க்கு
எவ்வாறு செயத்தகுவது ,,என்றெதிரே இறைஞ்சினுர்.

திருப்பூந்து ருத்தியில் இறைவனை வணங்கி, பாண்டி நாட்டில் நிகழ்ந்த யாவற்றையும் அப்பர் சுவாமிகளிடம் தெரி வித்தார் சம்பந்தர். பாண்டி நாட்டுத்தலங்களை வணங்க அப்பர் பெருமான் சென்ருர். சம்பந்த மூர்த்தி பலதலங்களை வணங்கிச் சீகாழி சேர்ந்தனர்.

தமது தந்தையான சிவபாதயிருத யரைச் சீகாழியில் இருக்கச் செய்து சம்பந்தப் பெருமான் தமது, யாத்திரையை மேலும் தொடங்கினுர். தில்லை, திருத்தினை திருமாணிக் குழி திருப்பாதிரிப் புலியூர், திருவதிகைமுதலான இடங்களை தரிசித்தார். திருவதிகையில் இறைவனதுகாட்சி கிடைத்தது. திருக்கோவலூர் முதலான தலங்களை தரிசித்து திருவண்ணுமலை வணங்கினுர்.

,,அண்ணுமலை தொழுவார்வினை வழுவாவணம் அறுமே"

என்றெல்லாம் பாடினுர்.

திருவோத்தூர் (ஒத்து—வேதம்) தேவர்கள் வேதத்தையருளிச் செய்த ஊர். இத்தலத்தில் நிவேதனம் பனம்பழமே. அங்கு தொண்டர்கள் பனைமரத்திற்கு நீரிட்டு வளர்த்தனர். நீரிடாவிட்டாலும் தாமே வளரக் கூடியவை பனைமரங்கள். பனைமரம் பயன்தர வெகுநாட்களாகும். "பனைவிதைத் தவன்பனை யெடான்" என்பது இக்காரணத்தினாலேற்பட்ட பழமொழி தொண்டர்கள் சம்பந்தப் பெருமானிடம் "இங்குள்ள சமணர்கள் உங்கள் இறைவனுக்கு நீர் உண்டாகியுள்ள பனைகள் காய்ப்பதற்கு ஏதாவது வழியுண்டோவெனக் கேலிசெய்கின்றனர். இது தீர அருள் செய்ய வேணும்" என வேண்டினர் காய்க்காத பனையை ஆண் பனையென்றும், காய்க்கும் பனையைப் பெண் பனையென்றும் பேசுவர். நாயனார் மனமிரங்கி அன்று இரவில்,

திருச்சிற்றம்பலம்

பூத்தேர்ந்தாயன கொண்டு நின்பொன்னடி
யேத்தா தாரில்லை எண்ணுங்கால்
ஒத்தூர் மேய ஒளிமழு வாளஅங்கைக்
கூத்தீரும்ம குணங்களே,

திருச்சிற்றம்பலம்

என்று தேவாரம் பாடினர். ஆண் பனைகள் காய்த்தன. சமணர்கள் ஓடினர். சிலர் தம் கமண்டலங்களை உடைத்தெறிந்தனர். பிறகு குரங்கணி முட்டம் எனும் ஊர் வழியாகக் காஞ்சிபுரம் வந்தடைந்தனர். அங்கு ஏகாம்பர நாதரைப் பணிந்து சம்பந்தப் பெருமான் உருகியநிலைமை

மருவிய ஏழிசை பொழிய; மனம் பொழியும் பேரன்பால்
பெருகியகண் மழைபொழிய பெரும்புகலிப் பெருந்தகையர்
உருகிய அன்புள்ளலைப்ப உமைதழுவக் குழைந்தவரைப்
பருகிய மெய்யுணர்வினெடும் பரவியே புறத்தணைந்தார்.

என்ற அழகிய கவிதையில் கூறுகிருர் அருள்மொழித் தேவர். பின் பல தலங்களைப் பணிந்து திருவாலங்காட்டை மிதிக்க அஞ்சி வெளியில் தங்கினுர்.

அப்பர், சுந்தரர், சம்பந்தர், காரைக்காலம்மையார் முதலானவர்கள் சிவபெருமானின் பெருமையை எடுத்து ஒதிய குருநாதர்கள் கண்ணப்பர் போன்றவர்கள் அடியார்கள். காரைக்காலம்மையார் முதலானவர் இருந்தஇடத்தை மரியாதை காரணமாக மிதிக்க அஞ்சினுர். காரக்காலம்மையாரே தலையாலே நடந்து வந்த பதியன்றோ திருவாலங்காடு.

இறைவர் நள்ளிரவில் சம்பந்தப் பெருமானது கனவில் தோன்றி "நம்மைப் பாட மறந்தனையோ?" என்று கேட்க, சம்பந்த மூர்த்திகள்,

திருச்சிற்றம்பலம்

துஞ்சவருவாரும் தொழுவிப்பாரும் வழுவிப் போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரும் முனைநட்பாய்
வஞ்சப்படுத் தொருத்தி வாணுள் கொள்ளும் வகைகேட்
டஞ்சும் பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளே.

திருச்சிற்றம்பலம்

எனப் பாடிப் பரவினர். பொழுது விடிந்ததும் உலகமறிவதற்காக மீண்டும் இப்பதிகத்தை ஒருமுறை பாடியருளினர். பின்னர் திருக்காளத்தி சென்று கண்ணப்பரின் திறம்குறித்து பாடினர்.

வட நாடு தமிழ் வழங்காத தேசமென்பதால் திருக்காளத்தியிலிருந்தே கேதாரம் முதலான பதிகளைப் பாடியருளினர். பின்னர் திருவேற்காடு முதலான தலங்களைத் தரிசித்து திருவொற்றியூர் வந்து இறைவரைப் பாடி மகிழ்ந்தார்.

இது இவ்வாருக, திருமயிலையில் சிவநேசர் என்ற வாணிகர் ஒருவர் ஞானசம்பந்தப் பெருமானது செயல்கள் கேட்டு மனமகிழ்ந்தனர். வெகுநாள் மக்கட்பேறில்லாத அவருக்கு ஒரு பெண் பிறந்தது. யாவருக்கும் நிறைய தானதருமம் செய்தனர். வளர்ந்த தமது மகளை ஞானசம்பந்தருக்கு என உலகறியக் கூறினர்.

சுற்றம் நீடிய கிளையெலாம் சூழ்ந்துடன் கேட்பக்
கற்றமாந்தர் வாழ்காழி நாடுடையவர்க் கடியேன்
பெற்றெடுத்த பூம்பாவையும் பிறங்கிய நிதியும்
முற்றும் என்னையும் கொடுத்தனன் யான்என்று மொழிந்தார்.

ஒருநாள் இச்சிறுமி மல்லிகை மலர்பறிக்க நந்தவனம் சென்ற காலத்து ஒரு அரவந் தீண்டியது. எவ்வளவோ மருந்து மந்திமுரம் செய்தும் பயனிலாதாயிற்று. "இந்தப் பெண்ணை உயிருடன் எழுப்புபவருக்கு நிதியளிப்பேன்"

என மூன்று நாட்கள் உடலை வைத்திருந்தனர். பயனில்லாது அப்பெண்ணின் உடலை அடக்கம் செய்து சாம்பலை ஒரு குடத்திலிட்டு வைத்தனர். அதை ஒரு மஞ்சத்தில் வைத்து, மாலை முதலானவையிட்டு, உணவு முதலான படைத்தனர். இந்நிலையில் சம்பந்தப் பெருமான் திருவொற்றியூர் வந்து சேர்ந்ததையறிந்து அவரை அழைக்க எண்ணி, திருவொற்றியூரிலிருந்து திருமயிலை வரை காவணமிட்டனர்.

சம்பந்தப் பெருமான் திருமயிலை நோக்கிச் சிவிகையில் வந்தனர். வணிகரான சிவநேசர் எதிர்கொண்டழைத்தனர். வணிகர் எதுவுமே கூறவில்லை. மற்றவர் சொல்ல சம்பந்தப் பெருமான் பூம்பாவை பற்றி அறிந்தனர். திருக்கோயிலுள் நுழைந்து கபாலீச்சுரனைப் புகழ்ந்து பரவி, வெளிவந்து, பூம்பாவையின் எலும்புகள் நிறைந்த குடத்தை திருக்கோயிலின் முன் கொண்டுவந்து வைக்குமாறு பணித்தார். சிவநேசர் சேடிகள் புடைசூழ ஒரு சிவிகையில் அக்குடத்தைக் கொண்டு வைத்தனர். "உலகில் பிறந்தவர் சிவனடியாருக்கு அமுதமளித்தல், திருவிழாக் காணல் ஆகியவைகள் உண்மையான பேறு என்றால் மீண்டும் உலகில் வருக".

மண்ணினில் பிறந்தார் பெரும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய்வித்தல்
கண்ணினால் அவர்நல் விழாப்பொலிவு கண்டார்தல்
உண்மையாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்.

என்று கூறி,

திருச்சிற்றம்பலம்

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
சட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரத் தமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்ட காணாதே போதியோ பூம்பாவாய்!

திருச்சிற்றம்பலம்

என அடியார்க்கு "அமுதளித்தல் காணாமல் போதியோ? ஐப்பசி ஓணவிழா, கார்த்திகைநாள் விளக்கீடு, மார்கழி திருவாதிரைநாள், தைப்பூசம், மாசிக் கடலாடல், பங்குனி யுத்திரம். முதலான விழாக்களைக் காணாமல் போதியோ?" என்றெல்லாம் கேட்டு பாடியருளினார். அதுவேளை ஞாலமும் விசும்பும் எல்லாம் அற்புதம் எய்தத் தோன்றி அழகினுக் கணியாய் நின்றாள். ஏழு வயதில் இறந்த பெண் ஐந்துவருடம் குடத்துள்ளிருந்து பன்னிரண்டு வயதினளாகத் தோன் றினாள். பிரமன் தான் படைத்த திலோத்தமையின் அழகினைத் தனது நான்கு முகங்களால் கண்டு, தன் நிலை யறியாது, அவளிடம் காமம் கொண்டான். நாயனாரோ அழகின் பிழம்பாக எழுந்து நின்ற அம்மையின் உருவில் சிவபெருமானுடைய கருணையையே ஆயிரமுகத்தாற் கண்டார். சிவநேசர் மனமகிழ்ந்து பூம்பாவையை மணந்து கொள்ளுமாறு சம்பந்தப் பெருமானை வேண்டினார். "உமது மகள் பாம்பு தீண்டி இறந்தனள். அவளை இறைவ னருளால் யான் படைத்தேன். எனவே திருமணம் புரிந்து கொள்வதென்பது தகாது. என மறுத்தருளினார். பெண்ணும் கன்னிமாடத்திருந்து சிவகதி பெற்றனள்.

திருமயிலையிலிருந்து புறப்பட்ட சம்பந்தப் பெருமான் பல தலங்களை தரிசித்துக் கொண்டு சிதம்பரம் வழியாகச் சீர்காழி வந்து சேர்ந்தனர். சீகாழியைக் கண்டதுமே சிவிகை விட்டிறங்கி "தூப தீபங்களாலும் வழிபட்டு காழி நகர் போய் சேருங்கள்" எனக் கடைசித் திருப்பதிகம் பாடினர். சீகாழிபற்றி இனி சம்பந்தப் பெருமானின் பதிகம் பெறுவதற்கில்லை யென்பது குறிப்பு.

திருச்சிற்றம்பலம்

நம்பொருள் நம் மக்களென்று நச்சியிச்சை செய்து நீர்
அம்பரம் மடைந்து சால வல்லுய்யப்பதன் முனம்
உம்பர் நாதன் உத்தம னொளிமிகுத்த செஞ்சடை
நம்பன்மேவு நன்னகர் நலங்கொள் காழி சேர்மினே.

திருச்சிற்றம்பலம்

சீகாழிப் பதிக்கு திருநீலநக்கர் முருகநாயனர் முதலானவர் வந்து சேர்ந்தனர். அதுபோது தந்தையாரும் மற்றவரும் சம்பந்தப் பெருமான் திருமணம் புரிந்து கொள்ள வேண்டு மென விண்ணப்பித்துக் கொண்டனர். வேள்வி முதலான செய்வதற்கு மனைவியுடனிருத்த வேண்டுமென்பதையும் சுட்டிக் காட்டினர். சிறிது மறுத்தளித்தப் பிள்ளையார் இணங்கினர்.

இல்லற வாழ்க்கையிலிருந்து புண்ணிய காரியங்களைச் செய்து இறையருள் பெற்று இறைவன் திருவடியடைவது என்பது வழி. சிறுகுழந்தையாயிருந்த போது இறையருள் பெற்றுவிட்டதால் இல்லறம் தேவையில்லை எனச் சம்பந்தப் பெருமான் எண்ணினர் போலும்!

சம்பந்தர் இணங்கியது கேட்டு மகிழ்ச்சி கொண்ட சிவபாதாயிருதயர் திருபெருமணநல்லூரில் உள்ள நம்பி யாண்டர் நம்பி என்பவரின் மகளைக் கேட்க அப்பதி புகுந்தார். பெண் கேட்டவருக்கு மகிழ்வுடன் பெண் பெற்றவர்கள்,

உம்முடைய பெருந்தவத்தால் உலகனைத்தும் ஈன்றளித்த
அம்மை திருமுலைப்பாலிற் குழைத்த வாரமுதுண்டாற்கு
எம்முடைய குலக்கொழுந்தை யாமுய்பத் தருகின்றேம் வம்மின்"

எனக்கூறி மகிழ்ந்தனர். திருமணங் கண்டு பூமி (பிருதிவி) நல்ல வளங்காட்டி விளைச்சலளித்தன. கடல் (அப்பு) முழக்கமிட்டு முத்துக்களை அலையுடன் தெரித்தது. தீ (தேயு) வலஞ்சுழித்து ஓங்கி வளர்ந்தது. திருநீறும் கண்டிகையும் தரித்த சிவனடியார் திருக்கலியாணம் காண வர, அவர் மீது உராய்த்து காற்றும் (வாயு) வந்து சேர்ந்தது. ஆகாயம் தனது வெண்மேகங்கள் கொண்டு வெள்ளைக் கொடிகட்டிய மாதிரித் தோன்றுயது.

சம்பந்தப் பெருமான் தோணியப்பரை வணங்கி, சிவிகையேறி திருப்பெருமணநல்லூர் வந்தனர்.

நம்பியாண்டர் நம்பி திருமணத்திற்கான மணமகனைச் சிவபெருமானே என எண்ணித் திருவடிகளை நன்னீரால் அபிடேகம் செய்து அந்நீரைப் பருகினர்.

பிறகு நன்மந்திரம் கூறி "என்றன் அருநிதிப்பாவையரைப் பிள்ளையார்க்கு அளித்தேன்" என்றார். திருநீலநக்கர் புரோகிதராக மந்திரங்கள் கூறினர். மனைவியைக் கைப்பிடித்த,

தீயை வலஞ் செய்ய வந்தவர் "விரும்புறும் அங்கியாவார் விடையுயர்த்தவரே" என எண்ணி, "தமக்கு இல்லறம் நடத்த நேருகிறதே! இவளுடன் சிவபெருமானையேஅடைவேன்" என எண்ணி திருக்கோயிலை நோக்கி நடத்தனர். "அம்மி மிதித்து அருந்ததி பார்க்கும் திருமணம் வேண்டாம். பல ஊர்களிலும் பதிகம் பாடிய போது இல்லறம் வேணுமென்றே கேட்கவில்லையே? தொண்டர்கள் திருமணத்தில் ஆசைகொள்ள மாட்டார்களே?"

திருச்சிற்றம்பலம்

கல்லூர்ப் பெருமணம் வேண்டா: சழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டு மெய்ய'ய்ந்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்:
நல்லூர்ப் பெருமணம் மேய நம்பரனே.

திருச்சிற்றம்பலம்

எனத் தேவாரம் பாடினர். நீயும் உம்மைத் திருமணம் செய்து கொண்ட மங்கையும் திருமணத்தில் வந்துள்ள யாவரும் எம்பாற் தோன்றும் சோதியிற் வந்தெய்துக" என்று கட்டளையிட, சோதியுருவாகக் காட்சியருளினர்.

திருச்சிற்றல்பலம்

காதலாகிக் கசிந்து கண்ணிர்மல்கி
ஓதுவார் தம்மை நன்னெறிக் குய்ப்பது
வேதநான்கினு மெய்ப் பொருளாவது
நாதனுமை நமச்சிவாயவே.

திருச்சிற்றம்பலம்

எனத் திருப்பதிகம் பாடி "யாவரும் இச்சோதியில் புக" வென்றனர் திருநீலநக்கர், முருகநாயனர். சிவபாத விருதயர் நம்பியாண்டர் நம்பி மற்ற திருமணம் காணவந்த அனைவரும் சோதியுட்புக நாயனரும் அச்சோதியை வலம் வந்து உயட்புகுந்தருளினர். திருக்கோயில் பழைய மாதிரியாக மாறிது. ஞானசம்பந்தர் திருவடிகளே சரணம்!!

சேக்கிழார் பெருமான் திருவடி வாழ்க!

திருச்சிற்றம்பலம்

# நெஞ்சே! நீ நிலைபெறுக!

வித்துவான்: திரு, வை. திருஞானசம்பந்தம் அவர்கள்,
ஈரோடு.

## கடவுள் வணக்கம்

நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண்முகனுக் கியல்சேர்
செஞ்சொல் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக் கரஆனை பதம்பணிவாம்.

தெளிவுரை:—

அடியவர்கள் நெஞ்சமாகிய வலிமைமிக்க கல் நெருப்பிலிட்ட மெழுகினைப் போல் உருகியோடும்படி நீயே எனக்கு அடைக்கலம் என்று நாடிவந்த போது அவர்

கட்கு அருள் செய்யும்படியான ஆறு திருமுகங்களையுடைய வராகிய சண்முகப் பெருமானுக்கு இயற்றமிழுக்கு உரிமை பெற்ற இலக்கணங்களோடு கூடியசெம்மை சான்ற சொற் களால் அழகுபடுத்தப்பட்ட பாமாலையாகிய கந்தர்அநுபூதி என்கிற தெய்வீகத் தன்மை பொருந்திய நூல் இவ்வுலகில் சிறப்படையும் பொருட்டு (நெஞ்சமாகிய வலிமை மிக்ககல் நெருப்பிலிட்ட மெழுகினைப் போல் உருகியோடும்படி) ஐந்து திருக்கரங்களையுடையவராகிய யானைமுகக் கடவுளின் ஞானசக்தி கிரியா சக்தியாகிய இரு திருவடி களையும் பணிவோமாக என்று அருணகிரிநாதப் பெருமான் பிள்ளையார் வணக்கம் செய்து நூலைப் பாடத் தொடங்கி யுள்ளார்.

விளக்கவுரை:—

நெஞ்சம் நிலைத்து நிற்கக் கூடியது. மனம் அலை பாயக் கூடியது. மனம் முதலில் ஒன்றை நினைக்கும். மண், பெண், பொன் இவை காரணமாகப் பின் மாறுபடும். மன மெனுமோர் பேய்க் குரங்கே! மடப்பயலே! நீதான் மற்றவர் போல் எனை நினைத்து மருட்டாதே கண்டாய் என்று இராமலிங்க அடிகள் மனம் மருளும் தன்மை யுடையது என்பதனை விளக்கியுள்ளார். அப்பரடிகளும் நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே! நீவா: நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப் புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி பணிவாயாக' என்று நிலைப்பதற்குரியது நெஞ்சு

என்றும், அது நிலைபெறுவதற்குரிய வழியையும் காட்டியுள்ளார். 'நனையாச் சடைமுடி நம்பனும் நம் தாதையும் நொந்தாத செந்தீ அனையானும் அமரர் பிரானுமாகிய அண்டவாணன் அடித்தலத்தை ஏ நெஞ்சமே! நீ நினையாது ஒழிதி கண்டாய்' என்று காரைக்காலம்மையாரும் நெஞ்சை முன்னிலைப்படுத்திப் பாடியுள்ளார், வெள்ளந் தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணேர் பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்!' என்று மணிவாசகப் பெருமானும்; கல்லேனும் ஐய! ஒரு காலத்தில் உருகும் என்கல் நெஞ்சம் உருகவில்லையே என்று தாயுமான சுவாமிகளும் பாடியதன் மூலம் உணரலாம்.

முருகப் பெருமானுடன் சூரபன்மன் போரிட்ட போது அவன் செய்த தவத்தின் மகிமைக்கு இரங்கி முருகன் தன் பேருருவைக் காட்டிய போது சூரபன்மன் மாலயன் தனக்கும் ஏனைய வானவர் தமக்கும் யார்க்கும் மூலகாரணமாய் நின்ற மூர்த்தியே கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரனாய்க் காட்சியளிக்கின்றனன் என்பதையுணர்ந்து,

சூழுதல் வேண்டும் தாள்கள் தொழுதிடல் வேண்டும் அங்கைத்
தாழுதல் வேண்டும் சென்னி துதித்திடல் வேண்டும் தாலும்
ஆழுதல் வேண்டும் தீமை அகன்றுநான இவற்காளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்தது மானம் ஒன்றே.

என்று போற்றினன். ஆனால் முருகனருளால் ஞானம் நீங்கப் பெற்ற போது முருகனை வழிபடுவதற்கு என் நெஞ்சை மானம் என்ற ஒன்று தடுத்து விட்டது என பதைத் தெளிவாகக் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் விளக்கியுள்ளதிலிருந்து நெஞ்சின் நேர்மையை உணர லாம். எனவே வள்ளுவரும்,

> தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
> தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

என்று நெஞ்சிற்கு அறிவுரைகூறுவதையும் உய்த்துணர்க.

ஆகவே மன்னு உலகத்தில் மன்னிய பெருமையுடை யது நெஞ்சமே என்பதும் அது நிலைப்பதற்குரிய வழி நெருப்பிலிட்ட மெழுகினைப் போல் உருகிக் காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி ஓதுவதே சிறப்புடையது என் பதும் போதரும்

இனி நெஞ்சை வளைந்து கொடுக்கின்ற இரும்பாக உருவகப்படுத்தாமல் வெடித்து விடுகின்ற கல்லாக உரு வகப்படுத்தியதும் ஒருநயம். இராவணன், சிவபெருமான் வீற்றிருக்கின்ற கைலையைச் சாமவேதம் பாடி நீராக உருகி யோடும்படிச் செய்தனன் என்றால் ஓதுவதற்கு இசை இன்றியமையாதது என்பதை உணரலாம்.

திருவாசகமிங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணல் சேணியில் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே.

என்பதானாலும்,

நெக்கு நெக்கு நினைப்பவர் தம்முளே
புக்கு நிற்கும் பொன்னூர் சடைப் புண்ணியன்.

என்பதனாலும் உருகி நிற்பதற்குரிய வழிகளையும் பயனையும் உணரலாம். மேலே சொன்ன கருத்துக்களையெல்லாம் உள்ளடக்கியே 'நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்துருக என்று அருணகிரிநாதப் பெருமான் அருளியுள்ளார். நெஞ்சக்கனகல்லும் நெகிழ்ந்துருக என்பதனை முன்னே தஞ்சத்தருள் சண்முகனுக்கும் பின்னே பஞ்சக்கரவானை பதத்திற்கும் கொண்டு கூட்டப்பட்டது,

பிரமன் முதலிய தேவர்கள் எல்லாம் சூரபதுமன் முதலிய அரக்கர்களால் அவதியுற்றுச் சிவபெருமானிடம் தஞ்சம் என்றடைந்த போது அவர்களுக்கு அருள் செய்வதற்காக ஐந்து முகத்தோடு அதோ முகமாய்க் காட்சியளித்து சண்முகப் பெருமானை அருளியது போல இங்கு முருகனடியார்கள் தன்னைத் தஞ்சம் என்றடைந்த போது தவருமல் அவர்களுக்கு அருள் செய்யக் கூடியது ஆறு முகமே என்பதனைத் தஞ்சத்தருள் சண்முகன் என்ற

தொடரால் விளக்கியுள்ளார். மேலும் எவ்வுயிர்க்கும் தஞ்ச மென நிற்கும் தனிப் பொருளாய் நிற்பதும் சண்முகனே என்பதனைக் குமரகுருபரர் கந்தர்கலி வெண்பாவில் விளக்கியுள்ளார்.

அருவப் பொருளாகவும் உருவப் பொருளாகவும் அநாதியாகவும் ஒன்ருகவும் பலவாகவும் பிரம்மமாகவும்நிற் கின்ற ஜோதியுருவான சிவபெருமானே ஒப்பற்றதிருமேனி யாய் கருணை பொருந்திய ஆறுமுகங்களையும் பன்னிரண்டு திருக்கரங்களையும் கொண்டு முருகன் என்ற திருப்பெய ரைத் தாங்கி இவ்வுலகம் உய்யத் தோன்றினுர் என்பதைக் கந்தபுராணம் அழகாகவிளக்கியுள்ளது. ஆகாயம்,கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு, கீழ் என்ற ஆறு திசைகளையும் ஆறுமுகமாகக் கொண்டவர் சண்முகப் பெருமான்.

அன்போடுகூடிவஞ்சினை சிறிதும் கலவாதஉண்மைப் பொருளை ஆராய்ந்தவர்களின் வாயிலிருந்து வருகின்ற சொற்களெல்லாம்இன்சொல் என்றுவள்ளுவர் வகுத்தவாக் கிற்கிணங்கஅருணகிரியார் முருகப்பெருமானுல் 'சும்மாயிரு சொல்லற' என்றும்; சிவபெருமானுல் 'துயா ஒழிக' என்றும் உமாதேவியால் 'பிறப்பு ஒழிக' என்றும் ஆட் கொள்ளப்பட்டவராதலின் அவரதுவாயிலிருந்து வருகின்ற சொற்கள் செஞ் சொற்களாயிராமல் வேறு என்ன சொற் களாய் இருக்க முடியும்.

புனமாலை என்பது புனையப்பட்ட பாமாலையாகிய கந்தரநுபூதியைக் குறிக்கும். அகரம் முதல் க்ஷகரம் ஈருக

வுள்ள ஐம்பத்தொரு எழுத்துக்களைப் போல் இவ்வநுபூதி ஐம்பத்தொரு பாடல்களால் புனையப் பட்டது என்பது விளங்கும். 'மாத்ருகா புஷ்பமாலை கோலப் பிரவாள பாதத்தில் அணிவேனோ' என்று திருப்புகழில் அறிமுகம் செய்தமை ஒப்புநோக்கத் தக்கது.

மேலும் சம்பந்தாண்டானின் சூழ்ச்சியால் தனது உடலை இழந்த அருணகிரியார் கிளி வடிவத்திலேயே இருந்து திருவண்ணாமலையை விட்டுப் பிரிந்து சென்ற போது முருகன் தோன்றி நாராயணனும் நான்முகனும் காணமுடியாதபடி பிழம்பு வடிவமாக நின்றதும், அன்னை பராசக்தியாகிய உண்ணாமுலையோடு அண்ணாமலையார் அமர்ந்திருப்பதும், பிறந்ததும் ஆட்கொள்ளப்பட்டதும், பேரின்பநிலை பெற்றதுமாகிய இடமாக இருப்பதும் திருவண்ணாமலையே ஆதலின் இங்கேயே இருந்து கொண்டு அநுபூதியைப் பாமாலையாகப் பாடுவாயாக என்றருள் செய்ததால் பாடப்பட்டதாகலின் முருகனுடைய அருளால் புனையப்பட்ட மாலை என்பதுதெளிவு. முருகனுடையஅருள் பெற்ற குமரகுருபரர் பாடிய பாக்களெல்லாம் மறைகளே என்பதைக் 'காலத்தொடு கற்பனை கடந்த கருவூலத்துப் பழம் பாடல்', தொடுக்குந் கடவுட் பழம் பாடல் தொடையின் பயனே' என்று மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழில் வருவனவற்றால் அறியலாம்.

சிறந்திட என்பதால் கந்தரநுபூதி இனிது சிறப்படையும் பொருட்டு என்பதைக்காட்டிலும் இதனைப்பாராயணம் செய்கின்ற முருகனுடைய அடியார்கள் சிறப்படையவும்;

இந்நூல் தோன்றியது தமிழகமாயிருந்தாலும் இதன் சிறப்பால் பாரதமும் ஏன் உலகமே சிறப்படையவும் வேண்டும் என்பதும் போதரும்.

இனி பஞ்சக்கரவானை பதம் என்பதற்கு ஐந்து கரங்களையுடைய யானைமுகப் பிள்ளையாரின் திருவடிகள் என்பதோடு பஞ்ச அக்கரவானை எனப்பிரித்து ஓங்கார வடிவவமான பஞ்சாட்சரத்தின் (ஐந்தெழுத்து) மூலப் பொருளான விநாயகக் கடவுள் என்றும் பொருள் கொள்ளலாம்! ஓங்காரமாம் ஐந்தெழுத்தால் புவனத்தையுண்டு எனவரும் தாயுமானவர் பாடலால் உணரலாம்.

தன்னையும் உலகத்தவரையும் உளப்படுத்திப் பிள்ளையாரின் திருவடிகளைப் பணிவாம் என்றது உளப் பாட்டுத் தன்மைப் பன்மை வினை முற்றுகும்,

---



# சேக்கிழாரும் சேயிழையார்களும் 11

'சிவநெறித் தவமணி'
செல்வி : த. பத்மாவதி அவர்கள்,
மதுரை ஆதீன சிஷ்யை,
54, இடாமுனி கோவில் மேலச்சந்து, மதுரை.

## இளையான்குடி மாறநாயனரின் மனைவியார்

''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்ருமை நன்று''

என்ற வள்ளுவதேவநாயனர் வாக்கிற்கிணங்க ஒவ்வொருவரும் புகழ்பட வாழ வேண்டுமானல், அப்புகழ் எப்படி வரும்? தன்னைத்தானே புகழ்ந்து கொள்வதால் புகழ் வராது. இல்லறத்தில் வாழும் ஒவ்வொருவரும் ஈதலில் ஈடுபட்டே புகழ்பெறுதல் வேண்டும் அதனலேயே

''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு''

என்று அருளினர் வள்ளுவர்

துறவற வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் சிந்தையை அடக்கிச் சும்மா இருந்து புகழ்பெறுதல் வேண்டும். ''சிந்தையை அடக்கியே சும்மா இருக்கும் திறம் அரிது'' என்பார் தாயுமானர். அப்படிச் சும்மா இருந்த மகான்களே உலகம் வாழ

வழி செய்த மகான்களாவார்கள். அவர்களுடைய பெருமையை வள்ளுவர்

> "துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
> இறந்தாரை எண்ணிக் கொண்டற்று"

என்று கூறுகின்றார்

இவ்விரு புகழ் பெறும் வழிகளுள் முதலில் சொல்லப் பெற்ற வழியே இயல்பானது அவ்வழியில் ஒழுகியே, நாயன் மார்கள் இவ்வுலகில் புகழும். அவ்வுலகில் சிவபதமும் பெற்றிருக்கின்றனர்.

தானங்களில் சிறந்ததானம் அன்னதானம். அதுவே நமக்கு மறுமைக்கும் வந்து உதவும் சட்டுச் சாதமாகும். கலி யுகத்தில் உயிர்கள் அன்னத்தையே ஆதாரமாகக் கொண்டு வாழ்கின்றன, பசித்தவருக்கு அன்னம் கொடுத்தால் உயிர் கொடுத்ததுபோலாகும்.

எத்துணை கொடிய நோய்வரினும் அந்த நோயோடு சில காலம்வாழலாம். பசிநோயோடு சிறிது நேரமும் வாழமுடி யாது பசிவந்திடப் பத்தும்பறந்துபோம்.

> மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
> தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்
> கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
> பசிவந்திடப் பறந்துபோம்.

ஔவைப் பிராட்டியார்.

எல்லாவற்றையும் விட்டுவிட்டோம் என்று சொல்லு கின்ற துறவிகளும் பசிவந்தால் காயோ, கனியோ, இலை சருகுகளோ, எங்கே என்று தேடி அலைகின்றனர். இந்த நிலையை முற்றத் துறந்த பட்டினத்தடிகள்

> பூணும்படிக்கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக்
> காணும்படிக்கல்ல மங்கையர்க்கல்ல நற்காட்சிக்கல்ல
> சேணுங் கடந்த சிவனடிக்கல்ல என்சிந்தை கெட்டுச்
> சாணும் வளர்க்க அடியேன்படும் துயரம் சற்றல்லவே

என்று அனுபவித்துப் பாடியிருக்கிறார்.

பசியை அடக்குதல் அத்துணை அரிது. அதனினும் உயர்ந்தது. பசித்து வந்தவர் பசியை மாற்றுதலாகும். எனவேதான் திருவள்ளுவ தேவநாயனுர் தனது தெய்வ நூலில்

ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலிற் பின்.

என்று அருளியிருக்கிருர்

இவ்வாறு பசித்து வந்தவர் பசியை மாற்றும் அறத்தை மேற்கொள்ளுதல் மிகவும் உயர்ந்தது. அதனினும் உயர்ந்த அறம்சிவனடியார்க்கு அமுதூட்டுதல்ஆகும்இதனை வள்ளுவப் பெருந்தகை

"உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து

என்ற குறள் மூலம் விளக்குகிருர்

சிவனடியார்கள், எப்போதும் சிவபெருமானைத் தன் நெஞ்சிலேநினைந்துவழிபடுவதால்,நினைப்பவர் மனம் கோயிலாக் கொள்ளும் நிமலன் அவர்கள் உள்ளத்திலேயே நிலைத்து சாந்நித்யமாக வீற்றிருக்கிருர். எனவே அவர்களுக்கு அன்ன மிட்டால்அதுஅவர்களுடைய பசியை ஆற்றுவதோடு அவர்கள் உள்ளத்தில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமான் ம கிழ்வதற்கும் ஏதுவாக அமைகிறது.

அதனுல்தான் சாதாரண மனிதர்களுக்கு அன்னமிட்டால் அது அன்னதானம் எனவும், சிவனடியார்களைப் பூசித்து அன்னமிட்டால் மகேஸ்வர பூசை எனவும் சொல்லப் பெறுகின்றது சிவபுண்ணியங்களில்மிகவும் சிறந்தது மகேஸ்வரபூசை அதனுல்தான் திருமூல தேவ நாயனுரும்

அகரம் ஆயிரம் அந்தணர்க் கீயிலென்
சிகரம் ஆயிரம் செய்து முடிக்கிலென்
பரமயோகி பகலூண் பலத்துக்கு
நிகரில்லை என்பிது நிச்சயந் தானே"

என்றருளினுர்,

இத்தகைய பெருமையுடைய மகேஸ்வரபூசையை நாள் தவறாது செய்து வந்த இளையான்குடி மாற நாயனாரின் மனைவியாரே, இவ்விதழில் நம்மால் வந்திக்கப்பெறும் அம்மையார் ஆவார். இவ்வம்மையார் தன் கணவனார் செய்து வந்த உயர்ந்த தொண்டுக்கு உறுதுணையாயிருந்த ஒன்றினால் மட்டுமே அவர் பெற்ற சிவப்பேறும், குபேரன் பணி செய்யக் கூடிய அளவு செல்வமும் பெற்றார்.

பாண்டி நாட்டிலே இளையான்குடி என்றஊரில் அவதாரம் செய்தமையால் மாறனார், இளையான்குடி மாறனார் என்னும் பெயர் பெற்றார். அவர் தில்லை நடராஜப் பெருமானிடத்தும் அவர் புகழ்பாடும் அடியாரிடத்தும் மிகவும்பக்தி கொண்டு ஒழுகி வந்தார், வேளாளர் குலம்செய்த மாதவத்தால் அவதரித்த அவர் உழவுத் தொழில் செய்து வந்தார். அதனால் வரும் வருவாயைக் கொண்டு

மண்ணினில் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்　　என்றபடி.

சிவனடியார்க்கு நாள்தோறும் அமுதூட்டும் பணியில் சிறந்து விளங்கினார்.

கொண்டு வந்து மனைப்புகுந்து குலாவுபாதம் விளக்கியே
கண்டு காதலின் ஆதனத்திடை வைத்தருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்திலாறு சுவைத் திறத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டரிச்சையில் அமுது செய்ய அளித்துளார்''

என்று அவர் அமுதூட்டிய அழகைச் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்கிறார். அமுதூட்டும் திருப்பணியில் அவர்தம் மனைவியார்தாம் பெரும்பங்கு கொண்டனர். அடியார்க்கு அமுதூட்டிய சிவபுண்ணியப் பெருக்கினாலே அவரது செல்வம் வளர்ந்து குபேரன்போல வாழ்ந்து வந்தார்.

செல்வம் பெருகிய காலத்திலேயன்றி செல்வம் குறைந்த காலத்திலும், அதாவது வறுமையுற்ற காலத்திலும், அப்பணி யினின்றும்சிறிதும் பிறழார் என்பதை உலகிற்கு உணர்த்து வான்வேண்டி, சிவபெருமான் அவருக்கு ஒரு பதம் தந்தராம் அப்பதமே வறுமைப்பதம். அவ்வறுமைப்பதம் அவரை விரைவில் வந்து சேரும்படி சிவபெருமான் செய்தார் என்று சேக்கிழார் பெருமான் அனுபவித்துப் பாடுகிறுர். "ஒல்லேயில் வறுமைப் பதம் புக உன்னினுர் தில்லே மன்னினுர்" என்ற அவரது வாக்கை நாம் உணர்தல் வேண்டும். சிவபெருமானே எல்லாம் தந்தது ஆதலால் வறுமையுமே ஒருபதம் ஆகிறது

அத்தகைய வறுமை நிலேயிலும், நாயனுரும் அவர்தம் மனேவியாரும் உள்ளம் சுருங்காதுநிலங்களேயெல்லாம் விற்றும், அணிகலன்களே விற்றும் அமுதூட்டும் பணியைவிடாது செய்து வந்தனர்.

ஒருநாள் நடு நிசியில் இருவரும் உண்ண உணவின்றி வெறும் நீர்மட்டும் அருந்தித் திருவைந்தெழுத்தை நெஞ்சில் இடைவிடாது ஓதியவண்ணம் இருந்தனர். அப்பொழுதுதான் சிவபெருமான் அடியவர், வேடத்தில் நாயனுர் வீட்டுக் கதவை வந்து தட்டினுர். கதவைத் திறந்தஅடியார், அமுதளிக்க சாதனங்கள் ஏதும் வீட்டில் இல்லே என்று தெரிந் துங்கூட, மகிழ்வோடு அவரை உள்ளே அழைத்துச் சென்று மழையில் நனேந்து வந்த அவரதுஉடலின் ஈரத்தை மாற்றி, இடங்கொடுத்து உபசரித்தனர்.

அவரது பசியைத் தீர்க்க விரும்பி மனேவியைக் கலந்து ஆலோசனேசெய்தார். மனேவியும் மனங்கோணுது ஆறுதலாகப் பதில் கூறுகிறுர். "பெருமானே! இந்த நடு நிசியில்

கடன் கொடுப்பார் யாரும் இல்லை வேறு வழியொன்றும் இல்லை. இன்று பகலில் வயலில் விதைத்து வந்த முளை நெல்லை வாரிக்கொண்டு வந்தால் அமுதாக்கித் தருகிறேன்'' என்றார்.

அம்மையார் அருளிய வாக்கு நாயனாருக்கு அமுதமாக இருந்தது. உடனே கூடையைத் தலையில் கவிழ்த்துக் கொண்டு, சிவநாமத்தை நெஞ்சிலும் நாவிலும் துணையாகக் கொண்டு, இருளில் தடவித் தடவி நடந்து சென்றார். மழை நீரில் ஒதுங்கியிருந்த நெல் முளைகளை வாரிக் கூடையில் எடுத்துக் கொண்டு தலைமீது சுமந்து வீடுவந்து சேர்ந்தார். கணவனார் வருகையை எதிர்பார்த்து வாசலிலேயே காத்திருந்த அம்மையார் அதைவாங்கி உள்ளே போனார். நெல் முளைகளைக் கழுவி எடுத்துக்கொண்டு, அடுத்த பிரச்னைக்குத் தன் கணவனாரை ஆலோசனை கேட்கிறார். நெல்லைப் பக்குவப் படுத்தி அமுதாக்க அடுப்பெரிக்க விறகில்லை என்செய்வது என்றார்.

நாயனார் கோடரி எடுத்துத் தனது வீட்டுக் கூரையின் ஒரு ஓரத்தில் இருந்த கட்டைகளை அறுத்துக்கொடுத்தார். அதனை எரித்து அதனால் நெல் முளையைப் பக்குவமாக அரிசியாக்கி, அன்னம் ஆக்கினார். அதன் பிறகு கறிக்கு என்செய்வது என்ற கேள்வியைக் கணவனார் செவியில் மெதுவாக விடுத்தார். அம்மையார் சொன்னவுடன் நாயனார் தோட்டத்துப்புறம் சென்று, அங்கு வளர்ந்திருந்த இளம்பருவமான இலைக்கறிப் பயிர்களைத் தம் பாசப்பழிமுதலை வேருடன் பறிப்பார் போன்று பறித்து வந்து தனது மாண்புமிக்க மனைவியாரிடம் கொடுத்தார்.

அவரும் அதனைக் கழுவிச்சுத்தம் செய்து தனது சமையல் கலைத்திறம் மிகுதியால், வேறு வேறு கறியமுதம் ஆக்கினார்.

எல்லாவற்றையும் தனது கணவனரிடம் காட்டி இனிமேல் அடியவரை நாம்உய்யுமாறு, அமுதுண்ண அழைப்போமென்று ஒத்தமனத்தவராய்மகிழ்ந்துஅடியவரிடம் சென்றனர் அடியவர் துயின்று கொண்டிருப்பது போ ர்றிருந்தார்.

''அழுந்திய இடருள் நீங்கி அடியேன்
உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய்! ஈண்டு
அமுது செய்தருள்க'' என்று
தொழும்பனர் உரைத்த போதில்
சோதியாய் எழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவியாரும்
தொண்டரும் துதித்து நின்ருர்.

இளையான்குடி மாற நாயனர் உணவுண்ண அவரை அழைத்தபோது இறைவன் சோதியாய்த் தோன்றினர். திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடி உடைய சிவ பெருமான் சோதியாய் எழுந்து தோன்றிய அருளை வியந்து திகைத்து எல்லையில்லாமகிழ்ச்சியுடன்பின்வருமாறு துதித்தன

சங்கரா போற்றி ஞானச் சம்புவே போற்றி யாற்றில்
வெங்கரா வடுமால் காணு விமலனே போற்றி என்றும்
செங்கரா மலகம் பான் திருவள் செய்வாய்
பொங்கரா வணிந்த வேத புங்கவ போற்றி போற்றி!

அன்பு மிக்க தொண்டரை நோக்கிய அம்பலத்தாடும் அண்ணல் அடியவரை நோக்கி அன்பனே என்று அழைத்து அவர் தம்மனைவியோடும், தனது சிவலோகம் எய்தி, குபேரன் நவநிதிகளை ஏந்தி நாயனரது ஏவல் கேட்பஎல்லையிலா இன்பம் எய்தி இருக்கும் படியாகத் திருவருள் புரிந்து மறைந்தார், நாயனர் சிவகணங்களுள் ஒருவராகி அவரது மனைவியாருடன்சிவலோகம் எய்திப்பேரின்பப்பெருவாழ்வில் திளைத்தார்.

# ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

(மாதப் பத்திரிகை)

- தமிழகத்தின் சமய வளர்ச்சிக்காக ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷினின் சார்பாக தமிழில் வெளி வருகிறது.
- மகான்களின் வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான நிகழ்ச்சிகள், நடைமுறை வாழ்க்கையில் மதத்தைக் கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகள், சாஸ்திரங் களின் உட்பொருள் விளக்கங்கள், ஆத்ம தத்துவம் குறித்த ஆராய்ச்சி, வேதாந்தம், பக்தி, சமய சமரசம், உபநிஷத உண்மைகள், சைவம், வைணவம், ஞானக் கதைகள் ஆகிய கருத்துகளைக் கொண்டது.
- தற்கால நவீன மக்களின் மனப்போக்குக்கு ஏற்ற வகை யில், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரும் சுவாமி விவேகானந் தரும் காட்டிய வழியில் சிறந்த மனிதர்களை உருவாக்குவது ஒன்றே இப்பத்திரிக்கையின் இலட்சியம்.
- உலகின் பல பாகங்களிலும் தோன்றிய சீரியசிந்தனைகள் ஒவ்வொரு இதழையும் அலங்கரிக்கின்றன.
- ஹிந்து சமயத்தை உள்ளபடியேபுரிந்துகொள்ள விரும்பு பவர்களுக்கும், பின்பற்ற விரும்புபவர்களுக்கும் மிகச் சிறந்தமுறையில் துணைபுரியும் தமிழ்ப்பத்திரிகை இதுவே
- இப்பத்திரிகையில் வெளிவரும்கட்டுரைகள் கருத்தாழம் கொண்டவை. ஸ்ரீ ராமகிருஷ்ண மடங்களைச் சேர்ந்த சன்னியாசிகளும் மற்றும் பல அறிஞர்களும் எழுதும் சிந்தனைக்கு விருந்தாக அமையும் கட்டுரைகளைக் கொண்டது.
- உங்கள் உள்ளம் உயர நீங்கள் அவசியம் படிக்கவேண்டிய பத்திரிகை இது.

சந்தா விவரம்

வருடசந்தா: ரூ 7-00 ஆயுள் சந்தா: ரூ 100

தனிப்பிரதி: 70 காசு

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர் :: சென்னை 600004

307

[சிவ சிவ

# "தானடங்காப் பேதை"

திரு, புலவர்: மாணிக்கம் அவர்கள்,
'முருக நிலையம்' விரூர்.

மனிதன் ஆரம்பமாவதும்
பெண்ணுக்குள்ளே — அவன்
ஆடிஅடங்குவதும்
மண்ணுக்குள்ளே!

ஆம், உண்மைதானே! அந்தபெண்ணுக்குள் ஆரம்பாகும், மனிதன் இந்த மண்ணுக்குள் சென்று மறையும் வரை அந்த இரண்டிற்காகவும் ஏங்கி இளைத்து அவன்படும் பாடு இருக்கிறதே! அப்பப்பா! சொல்லுந் தரமன்று, எத்தனை பொருமைப் பொச்சரிப்புகள். எத்தனை பயங்கரப் படு கொலைகள்?

அன்ருடம் செய்திதாளைக் கையில் எடுத்தால் முதல் பக்கம் கொட்டை எழுத்தில் மனைவி மீது சந்தேகம். அவள்

தலையை வெட்டி எடுத்துக் கொண்டு அவள் கணவன் போலீஸில் சரண் அடைந்தான். அடுத்தப் பக்கத்தைத் திருப்பினால் கணவனைக் உலக்கையால் அடித்துக்கொன்ற காரிகை கையில் விலங்குடன் காவல் நிலையத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டாள்.

அவளுடைய கள்ளக் காதலன் கரடி கந்தசாமியைப் போலீசார் வலைவீசித் தேடி வருகின்றார்கள். அதற்கடுத்த பக்கம் வரப்பு தகராறு, அண்ணனைத் தம்பி மண்வெட்டியால் அடித்துக் கொன்று கண்டதுண்டமாக்கிக் கழனியில் புதைத்தான். போலீஸ்மேலும் புலன்விசாரணை. அப்பப்பா! போதும்! போதும்!

நல்ல செய்திகளே இந்தச் செய்தித்தாள்களுக்குக் கிடைக்காதா? ஏன்? இவைகள் மட்டும் என்னவாம்செய்திகள் தானே!

இச்செய்திகளைமட்டும் அச்செய்திதாள்களில் போடாமல் தனியாகவா அச்சடித்துக் கொடுப்பார்கள். ம்........ யாதும் செய்தியே யாவரும் கேளீர்! அப்பப்பா! விந்தையான உலகம்! வேடிக்கையான மனிதர்கள் பாழும் பெண்ணாசையால் தானே ஆனானப்பட்ட இராவணன கூட, இராமனிடம் தோற்று.

வாரணம் பொருத மார்பும்
வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவர்க் கேற்ப
நயம்பட உரைத்த நாவும்
தாரணி மவுலி பத்தும்
சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போக்கி
வெறுங்கை யோடி லங்கை புக்கான்.

என்கிறார் கம்பர். அடுத்து அந்த இராவணன் அப்போது கூட வேறு எதற்கும் நாணாமல் 'சானகி நகுவள்' என்றே நாணத்தால் சாம்பி அழுகின்றான். இது பெண்ணாசையால் விளைந்த கேடு. அடுத்து மண்ணாசையால் விளைந்த கேட்டினைப் பார்ப்போம், ஒரு குலத்திற் பிறந்தவரே தங்களுக்குள் பாழும் மண்ணுக்காக மோதிக் கொண்டால் அது இருவருக்குமே வசையென்று கருதி தருமன் கண்ணனைத் துரியோதனன் பால் தூது அனுப்புகின்றான். கண்ணனிடம் தருமன் கூறுவதைக் கேளுங்கள்,

முந்தூர்வெம் பணிக்கொடியோன் மூதூரின்
நடந்துழவர் முன்றில் தோறும்
நந்தூரும் புனனாட்டின் திறம் வேண்டு
நாடொன்று நல்கா னாகில்
ஐந்தூர் வேண்டு அவையிலெனில் ஐந்திலம் வேண்டு
அவைமறுத்தால் அடுபோர் வேண்டு
சிந்தூரத் திலகநுதற் சிந்துரத்தின்
மருட்பொசித்த செங்கண் மாலே.

என்று எவ்வளவுக்கெவ்வளவு இரங்கிக் கூறுகின்றான் தருமன்: பார்த்தீர்களா? இறுதியில் ஐந்து வீடுகள் கிடைத்தாலும் போதும் என்பது தருமனின் எண்ணம். பாழும் மண்ணிற்காகப் போரிட்டு மண்ணிலே மடிவதைஅவன் மனம் விரும்பவில்லை, அவன் நீதிதேவதையின் வடிவம் அல்லவா!

ஆனால் நடந்தது என்ன? உயிர் இருக்கும் வரையில் ஈயிருக்க இடம் இப்புவியில் தாரேன் என்று சூளுரைத்துப் போரிட்டு மாள்கிறான் துரியோதனன். மண்ணாசையால் கௌரவர்கள் தங்கள் கௌரவம் குன்றி அழிந்தார்கள். இவ்விரு கதையாலும் நமக்குக் கிடைத்ததுதானே இராமாயண மகாபாரதம்.

ஆம் இன்னும் இதுபோன்ற இதிகாசங்கள் எத்தனை கிடைத்தாலும் மாந்தரின் மதிமோசங்கள் குறையவா போகிறது? ம்......! அதுதான் இல்லையே!

விடிய விடிய இராமாயணம் கேட்டுவிட்டு விடியற்காலையில் கூட வீட்டுக்கு வராமல் மாற்றானைப் விட்டுப் பிரிய ஆற்றாமல் ஆங்கேயே கிடப்பவர்கள் எத்தனை பேர்? அதுமட்டுமா? நாளெல்லாம் மாபாரதக் கதையைக் கேட்டுவிட்டுச் சிறுவரப்புத் தகராறுக்காக ஆயிரக் கணக்கில் செலவழித்து அன்றாடம் கோயிலைச் சுற்றுவது போல் கோர்ட்டையே சுற்றுபவர்கள் எத்தனை பேர்?

இவ்வளவு ஏன்? மாபாரதம் நிகழ்த்தும் மாமேதை களும், பிரசங்க ரத்னுகரங்களும், முத்தமிழ் வித்தகர்களும் கூட தன் பிரசங்கத்தை அவசர அவசரமாக முடித்துக் கொண்டு ஒரு சிறு நிலத்தகராறு, அதனுல் வக்கீலேயா வைப் பார்க்க வேண்டும் என்று வேகமாகச் செல்பவர்கள் எத்தனை பேர்?

அதிலும் இந்தச் செய்தியைக்கூட மேடையிலேயே பகிரங்கமாகப் பலர் அறியச் சொல்லிவிட்டுச் செல்லும் வெள்ளை உள்ளச் சீலர்களும், அறியாமை வாணர்களும் எத்தனை பேர்?

இது அதைவிட வெட்கக் கேடு அல்லவா! இத்தகைய பக்திமான்கள் எல்லாம் அறிவுக் கருவூலமான அக்கதை களைச் சொல்லுவதனுலே யாருக்கு என்ன லாபம்? ஏன்? லாபம் இல்லாமலா இருக்கிறது? கேட்பவர்களுக்கு ஒரு வேளை 'காலவிரயம்' என்ற நஷ்டம் ஏற்பட்டாலும் சொல் லுபவர்களுக்கு லாபம்தானே!

நல்ல வருவாய் மேலும் இத்தகைய மேதைகளைத் தானே எங்கும் வருவாய்! வருவாய்! என்கிருர்கள். தவிர வும், இவர்கள் ஒருரில் கதை சொல்லிக் கொண்டிருக்கும் போதே அடுத்த ஊரிலும் அச்சாரம் பிடிக்க அலைவார்கள். காரணம் வேறு ஒருவர் அவ்வூரைப் பிடித்துவிடக் கூடாதே என்பதுதான்.

இதிலும் ஒருவரே மாமூலமாகக் கதை சொல்லுபவர்களும் உண்டு. தப்பித் தவறி? புதுஆள் அவ்வூர்களில் பாரதம் சொல்ல ஒத்துக் கொண்டால் போதும்.........அவ்வளவுதான், பாரதமே (பார்—அதம்) நடக்கும் பாவம்... பாதிக் கதையிலேயே இப்போதைய ஒருசில சட்டசபைகளைப் போல, பலப்பரிட்சை பார்க்க வேண்டியதுதான்.

அப்பப்பா! இவர்கள் எல்லாம் மேடையிலே கருணையைப்பற்றி வாய்கிழியக் கதையளப்பார்கள். மேடைக்குக் கொண்டுவரும் பால் எவ்வளவு ஆனாலும் அவ்வளவையும் தானே குடித்துவிட்டுக் கையேட்டுக்காரருக்குக் கொஞ்சமும் கொடுக்காத டண்ணியவான்கள். பாவம். இப்படிப் பதை அவர் பார்த்துக் கொண்டே பாடவேண்டியது தான்.

[நாமே கையேட்டுக்காரருக்கென்று பாலைத் தனியாகவே கொடுத்தால் நல்லது] அப்படிப் பாடும் போது கையேட்டுக்காரருக்குக் கொஞ்சம், நெஞ்சம் காய்ந்து பாட்டு சற்றுத் தடுமாறினாலும் போதும். உடனே பிரசங்கியார் கையேட்டுக்காரர் பக்கம் திரும்பி மேடையாயிற்றே என்றும் பாராமல் அவர் இசை பாடும் போது இவர் அவரைப்பற்றி வசைபாட ஆரம்பித்து விடுவார்.

இவர், தன்னால்தான் பாரதமே வாழுகிறது என்ற நினைப்பில் கையேட்டுக்காரரால்தான் பாரதமே கெடுகிறது

என்பார். இப்படியே ஒவ்வொரு நாளும் கையோட்டுக்கார ரோடு பிரசங்க பூஷிணம் போர் நடத்தி மக்களுக்கும் தனது பிரசங்கந்தில் போர் (BORE) அடிக்க வைத்து விடுவார்.

இப்படியே ஒவ்வொரு நாளாய் ஒவ்வொரு போரை முடித்துக் கொண்டு 18–ஆம் போரோடு கௌரவம்குன்றி அழிந்த கௌரவர்களின் கதையை ஒருவாருக முடித்து, தன் கௌரவம்பற்றிக் கவலைப்படாத கதாகாலட்சேப விற்பன்னர்களும் உண்டு.

இறுதியில் வந்த வருவாய் அனைத்தையும் தாமே சுருட்டிக் கொண்டு கையேட்டுக்காரரைத் தன் பின்னே வருவாய் எனச் சொல்லிப் போவோரும் உண்டு. விந்தையான உலகம்! வேடிக்கையான மனிதர்கள்!

அவ்வளவு வருவாய் வந்ததே, எனக்கதில் ஏதேனும் தருவாய் எனக் கெஞ்சியபடி 'முகாரி' பாடிக் கொண்டே கையேட்டுக்காரர் அப்பிரசங்க மாமணியைத் தொடர் வதும் உண்டு. அவர் பெயரே கையோட்டுக்காரர்தானே! அப்பெயருக்கேற்ப அவர் இறுதியில் கையோட்டோடு போக வேண்டியதுதான். பாவம்! இப்படியெல்லாம் எதிர்

காலத்தில் நிகழும் என்று நம் திருவள்ளுவருக்கு அன்றே தெரியும் போலும்! அவர் ஒரு தீர்க்கதரிசி அல்லவா? இத் தகையவர்களையெல்லாம் கண்டித்து அன்றே உரிமை யுடன் குரல் கொடுத்திருக்கின்றார். இதோ அவர் குரலே ஒலிக்கின்றது கேட்போமா?

"ஓதிஉணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல்" - குறள் 834.

---



365

# இது சரியா?

திருமதி, உமாதேவி பத்மநாபன் அவர்கள்,
அரியாங்குப்பம், புதுவை – 7.

கருவி வேண்டுமானுல் மனிதனுக இருக்கலாம். ஆனுல் கர்த்தா இறைவனே, அதனையுணர்ந்தே "எல்லாம் அவன் செயல்" என்றும் அவனன்றி ஓரணுவும் அசையாது என்றும் சான்ருேர் கூறினுர். அதுவும் அவர்களால் அனுபவ பூர்வமாக உணரப்பட்ட உண்மையைத்தான் கூறிச் சென்றனர். இறைவனின் இன்னருள் இருந்தால் விதிகூட விலகிப் போகுமாம், தன் பாதையிலிருந்து. அதனை உணர்த்தும் முகமாக மார்க்கண்டேயர் வரலாறு உள்ளது. அதுமட்டுமா எந்தத் தீவினை என்ன செய்யும் என்று அறைகூவல் விடுகிருர் அருணகிரியார்.

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே!

என்று அவர் கூறுவது உலகமக்கள் அனைவருக்குமே கூறப்பட்டதாகும், இறையுணர்வு இருந்தால், அவனிடம் ஆராக் காதல் கொண்டிருந்தால் எதுவும் ஒன்றும் செய்யாது என்கிறார். நாளும், வினையும், கோளும், கூற்றும், மட்டுந்தானு செயலற்றுப் போகும். கடப்பந்தார் மார்பனிடம் கொண்ட காதல், அயன் எழுதிய எழுத்தைக்கூட கூட அழித்து மாற்றிவிடும் என்கிறார்.

சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்தது இங்கென்றலை மேலயன் கையெழுத்தே,

என்றும் கூறுகிறார். மாசற்ற அன்பு கொண்ட அடியார்களின் வாழ்க்கைவரலாறு அவர் கூற்றுக்குச் சான்றுக உள்ளது.

ஆனல், தற்காலத்தில் இந்த உணர்வு மிகமிகச் சிலரிடம் மட்டுமே இருப்பது வருந்தத் தக்கது. மக்களில் பெரும்பாலோரிடம் இரையுணர்வு உள்ளதே தவிர இறையுணர்வை காணேம். இது பலருக்கு கோபத்தை உண்டாக்கலாம். கோவிலிலும், திருவிழாவிலும் கூடும் கூட்டங்களைப் பார்க்கவில்லையா? என்ற வினவை எழுப்பலாம்.

ஊன்றிக் கவனித்தால் வருபவர்கள் அனைவரும் இறைவனிடம் உள்ள உண்மையான அன்பாலா? அல்லது தன்னலத்தாலா என்று நம்மை நாமே கேட்டால் உண்மையான விடை கிடைக்கும். இவர்கள் அன்பர்கள் தான். ஆயிரம், ஆயிரமாகச் செலவு செய்து இறைவனைக் குளிரக் குளிரக் குளிப்பாட்டுபவர்கள்தான். இவர்களே நாளை விரும்பியது கிடைக்காவிடில், சாமியாவது, பூதமாவது என்று கேட்கும் பகுத்தறிவு (?) வாதிகளாக மாறி விடுகின்றனர். இது யாராலும் மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

அடுத்து ஆலயம் வரும் அடியவர்கள் (?) வேண்டிக் கொள்வதை அதாவது நேர்ந்து கொள்வதைக் கேட்டால் நமக்கு மேலே மூச்சுவிடக் கூடத்தோன்றுது. வாய்தோத்திரம் படிக்கும் கரங்கள் கூப்பியபடி இருக்கும். மனம்? அது ஆண்டவனிடம் ஒன்றியிருப்பது அருமையிலும் அருமை. கண்கள் திருட்டுத்தனமாக எங்கெங்கோ அலையும். இதன் பெயர் ஆலய வழிபாடு. இதற்கு மகுடம் சூட்டியது போல் சிறந்த பக்தன் போல் வெளிவேடம், ஊரார் புகழ வேடந்துக்கேற்ற நடிப்பு இதுதான் உண்மை வழிபாடா? இப்படி நடப்பது சரியா? இது ஆலயம் தொழும் ஒவ்வொருவரும் தமக்குத் தாமே எழுப்பிக் கொள்ளக் கூடிய கேள்வியாகும். இந்தக் கேள்வி ஒவ்வொருவர் மனதிலும் என்று எழுகின்றதோ அன்று

தான் ஆலய வழிபாடு புனிதமான அன்பு வழிபாடாக மிளிரும்,

இரண்டாவதாகப் பெரும்பாலோரின் வேண்டுதல் களைக் கவனிப்போம். இவர்கள் என்ன அடியார்களைப் போல் மறுமையின்பம் கேட்பவர்களா? இறைவனிடம், நினைமறவாதிருக்க அருள வேண்டும் எள்பவர்களா? அல்லது சுந்தரர் போல், "அடியார்க்கு மடியேன்" என்றுருரைத்து அவர் தம் கூட்டுறவை விரும்புபவர்களா? அப்படியெல்லாம் கேட்டிருந்தால் இறைவன் அருள் செய்யாமல் இருக்கப் போகிருரா? இவர்கள் அதையெல் லாம் கேட்பதில்லை. பின் என்ன் கேட்பார்கள் என்று நினைக்கின்றீர்களா?', அடுத்தவன் ஐந்து மாடிக் கட்டிடத் தில், ஆள் அம்புகளுடன் வாழ்ந்து' கெடிலாக் காரிலும், ரோல்ஸ் ராய்ஸிலுமாகப் போகிருனே! நான் என்ன அவனுக்கு இளைத்தவனு? அல்லது மட்டமாகி விட்டேனு? எனக்குப் பத்து மாடிக் கட்டிடமும், பாங்கில் பலஇலட்சங் களுமாக இருக்கும்படி அருள் செய்யக் கூடாதா" என்று சகல வசதிகளும் நிறைந்தவனே கேட்பான். இப்படிக் கேட்கிருேமே, இது சரியா? என்பதை அவன் சிந்திப்பது இல்லை.

வேறு ஒருவனே "எனக்கு சொத்து இல்லையே, நான் லாட்டரிச் சீட்டும், ஜாக்பாட் டிக்கெட்டும் வாங்கி

யிருக்கிறேனே, எல்லாச் சீட்டுக்கும் பரிசு வேண்டாம். ஏதாவது ஒன்றுக்கு முதல் பரிசாகப் பெரிய தொகை கிடைக்கும்படிச் செய்யமாட்டாயா? அப்படிச் செய்தால் உனக்கு இவ்வளவு தொகை பங்கு தருவேனே. திருக் கல்யாணம் செய்வேனே! உன் உண்டியலில் இவ்வளவு பணம் காணிக்கைச் செலுத்துவேனே என்றெல்லாம் வேண்டுவான்.

இவையெல்லாம் வேண்டுதல்களா? பேரமல்லவா பேசுகிருன். யாரிடம், யார் பேரம் பேசுவது என்ற வரம்பு கிடையாதா? பக்திப் பெருக்குடன் நன்றியறிதலுடன், அளிக்கப்படும் பொருட்கள்தான் காணிக்கை. அதற்கு மதிப்பீடு இல்லை, மாசு இல்லை, ஈடுஇணையும் இல்லை, அவவாறிருக்க, "நீ எனக்கு சொத்து கொடு, நான் அதில் உனக்குப் பங்கு தருகிறேன்" என்று சொல்வது எவ்வளவு மதியீனம். என்ன ஒரு ஆணவம். ஐயோ! அவன் நன்ருக இருக்கின்ருனே! என்னளவு கூடப் படிக்கவில்லையே. தாழ்ந்த குலத்தவன்தானே! இருந்தும் என்ன புகழ், என்ன பெருமை! எவ்வளவு செல்வம். இந்தக் கடவுளுக்கு ஏனிந்த ஓரவஞ்சினை" என்றெல்லாம் புலம்பும் அறிவிலி களை என்ன செய்வது. அவன் நன்ருக இருக்கின்ருன் என்ருல் அவன் முன்வினைப் பயன் அது. முற்பிறவியில் அவன் புண்ணியம் செய்தான். அதன் பயன். அவனுக்கு

எவ்வாருே சிட்டிவிட்டது. அதற்கு நீயேன் இடித்துக் கொள்கின்ருய்? நீயும் இந்தப் பிறவியில் நல்லசெயல்களைச் செய்யேன் யார் வேண்டாம் என்று தடுத்தார்கள்'' என்று பெரியோர்கள் இடித்துரை கூறினல் கேட்பான் என்று நினைக்கின்றீர்களா. அது கிடையாது, அது மட்டும் இல்லை அவனுவது தன்னிலையைச் சற்றேனும் சிந்தித்து' போன பிறவியில் என்ன பாவம் செய்தோமோ நம்மையிப்படி நாயாய், பேயாய் அலையவைக்கின்றதுஒழியட்டும் அடுத்த பிறவியாவது நல்லபடி அமைய, அல்லது இப்போதுள்ள பாவம் மேலும் வளர்ந்து விடாமல் தடுக்க நல்ல செயல் களைச் செய்வோம், தொண்டுகளை மேற்கொள்வோம்,பிறப் பிறப்பற்றஎம்பெருமானை இடைவிடாமல் மனதுள் வழூத்து வோம் என்ருவது நினைப்பானு. நினைத்து அதன்படி நடப் பானு என்ருல் அதுவும் கிடையாது. அடுத்தவனை எப்ப டிக் கெடுப்பது? என்ன அவதூறுகளைக் கிளப்பலாம்? எப் படி அவனை மட்டந்தட்டலாம்? என்றெல்லாம் மிகமிகப் பிரமாதமாய்த் திட்டந் தீட்டுவானே தவிர, அறிவு பெறமாட்டான் இவன் ஒருவனு? இவனைப்போல் பல்லா யிரக்கணக்கானேர் உள்ளனர். இவர்களெல்லாம் தாங் கள் செய்வது சரியா? என்று சற்றேனும் நினைப்பதில்லை நினைத்துப் பார்க்க முன்வருவதும் இல்லை சமுலாயம் இந்த நிலையில்சென்ருல் எப்போது உருப்படுவது.

3[?]1

# "திருநீற்றின் வகையும் இட்டுக் கொள்ளும் முறையும்"

திரு, T. H. விவேகானந்தம் பிள்ளை அவர்கள்.

சென்னை.

—

திருநீற்றில் ஐந்துவகை உண்டு. கபிலநிறத்தை யுடைய நந்தை என்னும் ப்சுவின் சாணத்தால் உண்டாக்கிய நீறு வீபூதி; இது செல்வம் நல்கும். கருமை நிற முடைய பத்திரை என்னும் பசுவின் சாணத்தால் உண்டாக்கிய நீறு பசிதம். இது சிவத்தை உண்டாக்கும். வெண்மை நிறமுடைய சுரபி என்னும் பசுவின் சாணத்தால் உண்டாக்கிய நீறு பஸ்மம்: இது பாவம் போக்கும். புகை நிறமுடைய சுசீலை என்னும் பசுவின் சாணத்தால் உண்டாக்கிய நீறு சாரம். இது இடரை நீக்கும். செம்மை நிறமுடைய சுமனை என்னும் பசுவின் சாணத்தால் உண்டாக்கிய நீறு இரட்சை, இது இரட்சிக்கும்.

ஐந்தெழுத்தைஏழுமுறை கூறித்தண்ணீரில் குழைத்து உச்சந்தலை முதலான பதினைந்து இடங்களில் ஐந்தெழுத்தைக்கூறி முக்குறியாக இட்டுக் கொள்ளுவது.

பதினைந்து இடங்களாவன:— 1) சென்னி (உச்சந்தலை) 2) நெற்றி. 3, 4) இருசெவி. 5) கண்டம். 6, 7) இரு தோள்கள். 8) மார்பு. 9) உந்தி. 10) பிடரி. 11, 12) இருவாகு (முழங்கை) 13) முதுகு. 14, 15) மணிக்கட்டு.

குறிப்பு: "சென்னியொளிர் நுதல் செவிகள், களம் புயங்கள் அகலிதயம் சிறந்தவுந்தி மன்னுபிடர் இருவாகுவொடு சங்கவின் கூர்மணி பந்தங்கள்என்னவரு மூவைந்துதானத் தும் புனல் கலந்த இனிய நீற்ருல் உன்னலரும் புகழ்திரி புண்டரமிடுவர் மூலமனுவுரைத்து நல்லோர்" என்பது சித்தாந்த சிகாமணி.

## இட்ட லிங்கத்திற்கு திருநீறணியும் மந்திரம்:

"பாவம் தீயஇடர் நீங்கப்
பகை நோய் போக்கிக் காப்பாற்ற,
மேவும் செல்வம் மிகவளர,
மேலாம் சிவத்தை விளைவிக்க
ஆவில் விளைந்த திருநீற்றை
அங்கை விளங்கும் பெருமானே!
மேவிப்பரவி உனக்களிகுது
மிகவும் உருகிப் பணிகின்றேன்"